**செய்தி வெளியீடு எண்: 772** **நாள்: 08.11.2019**

**செய்தி வெளியீடு**

**பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் இன்று முதல் குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை**

**மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு அவர்கள் மற்றும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்கள் ஆகியோர் தகவல்**

வெங்காய விளைச்சல் பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக வெங்காயத்தின் விலை உயர்ந்து காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து வெளிச்சந்தையில் வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்தி, நுகர்வோருக்கு குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை செய்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதனைத் தொடர்ந்து, **4.11.2019** மற்றும் **6.11.2019** ஆகிய தினங்களில் கூட்டுறவு மற்றும் உணவுத் துறையின் மூலம் குறைந்த விலைக்கு விற்பனை செய்வது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, கூட்டுறவு மற்றும் உணவுத் துறையின் மூலம் தரமான வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு, நுகர்வோர் பயன்பெறும் வகையில், வெளிச்சந்தை விலையை விட குறைவாக, ஒரு கிலோ ரூ.30/– மற்றும் ரூ.40/–க்கு தமிழ்நாட்டில் செயல்படும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலமாக இன்று முதல் விற்பனை செய்யப்படும்.

அரசின் இந்நடவடிக்கையினால் வெங்காயத்தின் விலை உயர்வானது கட்டுக்குள் கொண்டுவரப்படும் என, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜு,அவர்களும் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.இரா.காமராஜ் அவர்களும் தெரிவித்துள்ளனர்.

................

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**